சார்பு நீதிமன்றம், பெருந்துறை

OS No: 26/2018

2025-ம் ஆண்டு ஜீலை மாதம் 03 நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 03.07.2025

Pw1 (பாலகிருஷ்ணன்)

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் ஒன்றாம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் நசலை என்னிடம் தந்ததாக குறிப்பிட்டுள்ளேன் அது ஒப்பந்த சமயத்தில் தந்தார்களா என்றால் இல்லை ஒப்பந்தம் செய்த பின்பு ஒரு மாதம் கழித்து தந்தார்கள். என்னுடைய பிரமாண பத்திரிகையில் ஒரு மாதம் கழித்து அசல் கிரைய பத்திரம் தந்ததாக குறிப்பிடவில்லை என்றும் ஒப்பந்தம் செய்த தேதியிலேயே அசல் கிரய பத்திரம் தந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கொடுத்ததாக சொல்லும் நான்கு லட்சம் ரூபாய் யார் முன்னிலையில் எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்ற விபரம் என் வழக்கிலோ முதல் விசாரணை குறிப்பிடவில்லை என்றால் ஆமாம்.

தாவா சொத்தை கிரயம் வாங்கிக் கொள்கிறேன் என்று பிரதிவாதி இடம் நான் எப்போது பேசினேன் என்றால் 1 ம் பிரதிவாதி ஈஸ்வரமூர்த்தியை நான் அடிக்கடி சந்திப்பேன்,அந்த வகையில் எனக்கு அவர் சொத்து விற்பது பற்றி சொன்னார்

கிரைய உடன்படிக்கைக்கு சுமார் ஒரு மாதம் முன்பு அதை கிரயம் வாங்குவது பற்றி பேசினோம். அவ்வாறு யார் முன்னிலையில் பேசினோம் என்றால் வேறு யாருமில்லை நாங்கள் மட்டும்தான் பேசினோம். அவ்வாறு ஒப்பந்த தேதிக்கு ஒரு மாதம் முன்பு தேசிய போதே கிரைய தொகை எவ்வளவு வேண்டும் அட்வான்ஸ் தொகை எவ்வளவு என்று நாங்கள் பேசினோமா என்றால் ஆமாம்.

பேசி முடிப்பதற்கு முன்பாகவே நான் தாவா சொத்தின் புல எண் மற்றும் அது எங்கு உள்ளது மற்றும் அதன் விஸ்தீரணம் எவ்வளவு அதில் வில்லங்கம் உள்ளதா என்ற விவரங்களை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை பேசி முடித்த பின்பு தான் வில்லங்கம் பார்த்தேன். புல எண் , சொத்து எங்கு உள்ளது சொத்தின் பரப்பளவு ஆகியவை முன்பே தெரிந்து கொண்டேன்.பேச்சுவார்த்தை நடந்த எத்தனை நாட்கள் கழித்து வில்லங்கம் எடுத்து பார்த்தேன் என்றால் இரண்டு மூன்று நாட்களில் எடுத்து பார்த்தேன். வில்லங்கம் பார்த்த பின்பு தாவா சொத்து கிரயம் பெறுவதற்கு உகந்த சொத்து தான் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். ஆனால் அதில் அவர் வீட்டு வசதி வாரியத்திடம் அடமானம் வைத்திருந்தார் என்பது தெரிந்து கொண்டேன் .அந்த அடமானத்தை அவர் மீட்ட பின்பு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்று நாங்கள் பேசி முடிவு செய்தோம். அடமானத்தை மீட்ட பின்பு உடன்படிக்கை செய்து கொள்ளலாம் என்று நான் சொன்னேனா அல்லது ஈஸ்வரமூர்த்தி சொன்னாரா என்றால் ஈஸ்வரமூர்த்தி தான் சொன்னார்.

கிரயம் செய்ய உகந்த சொத்தாக இருக்கும் பட்சத்தில் எதற்காக நேரடியாக கிரையம் செய்யாமல் கிரைய ஒப்பந்தம் ஒரு வருடம் காலக்கெடு போட்டு ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் அடமானம் மீட்ட பின்பும் அசல் கிரைய பத்திரம் எத்தனை நாட்கள் கழித்து ஈஸ்வரமூர்த்தி கையில் கிடைக்கும் என்று

தெரியாது என்பதனால் ஒரு வருட காலம் போட்டு ஒப்பந்தம் செய்து கொண்டோம். கிரைய உடன்படிக்கை செய்த பின்பு ஒரு மாதம் கழித்து ஈஸ்வரமூர்த்தியே அசல் கிரைய பத்திரத்தை என்னிடம் கொண்டு வந்து கொடுத்தார் என்றால் ஆமாம். அவ்வாறு அசல் கிரய பத்திரம் அவர் கொண்டு வந்து தந்த போது உடனடியாக கிரையம் செய்து கொள்ளலாம் என்று நான் சொல்லவில்லை என்றால் சொன்னேன் அதற்கு அவர் தனக்கு லீவு கிடைக்கவில்லை என்றும் கிடைக்கும் போது வந்த கிரயம் செய்து தருகிறேன் என்று சொன்னார். லீவு கிடைக்கும் போது கிரயம் செய்து தருவதாக ஈஸ்வரமூர்த்தி சொல்லி சென்றதாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல.

கிரைய உடன்படிக்கை செய்து கொண்ட தேதியில் தாவா சொத்தின் அசல் கிரய பத்திரம் என்னிடமும் இல்லை ஈஸ்வரமூர்த்தி இடமும் இல்லை என்றால் ஆமாம். அசல் கிரய பத்திரம் கையில் இல்லாத நிலையில் எந்த பத்திரத்தின் அடிப்படையில் கிரைய உடன்படிக்கை எழுதப்பட்டது என்றால் ஜெராக்ஸ் நகல் இருந்தது, அதன் அடிப்படையில் உடன்படிக்கை தயாரிக்கப்பட்டது. கிரைய உடன்படிக்கை தயார் செய்த போதே பெருந்துறை ஆசிரியர் மற்றும் கல்வித்துறை அலுவலர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திலிருந்து ஆவணங்களை பதிவு செய்வதில் ஆட்சேபனை இல்லை என்று ஒரு கடிதம் பெறப்பட்டது என்றால் ஆமாம். கிரைய உடன்படிக்கை பத்திரத்தில் அதுவும் ஒரு அங்கமாக இணைக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

வீடு கட்டும் சங்கத்தில் இருந்து என்ஓசி வழங்கி உள்ள பட்சத்தில் கிரய உடன்படிக்கை செய்யாமல் நேரடியாக கிரைய பத்திரமே செய்திருக்கலாமே என்றால் அசல் கிரைய பத்திரம் இல்லாமல் கிரையம் சப் ரிஜிஸ்டர் அலுவலகத்தில் பதிவு செய்ய முடியாது என்று சொன்னார்கள், அதனால் ஒப்பந்தம்

போடப்பட்டது. சப் ரிஜிஸ்டர் அலுவலகத்தில் அசல் கிரைய பத்திரம் இல்லாத காரணத்தினால் பதிவு செய்ய இயலாது என்ற காரணத்திற்காக கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொள்வதாகவும் அதில் ஒரு வருட காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் கிரய ஒப்பந்தத்தில் சரத்துக்கள் எதுவும் உள்ளதா என்றால் இல்லை.

வாசாஆ 1 கிரைய ஒப்பந்தம் ஒரு வருட காலம் எதற்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்ற விளக்கம் ஏதும் இல்லை என்றால் சரி. மேற்படி கிரைய உடன்படிக்கை கடனுக்காக எழுதப்பட்டது என்பதனால் தான் ஒரு வருட காலக் கெடுவிற்கு காரணம் ஏதும் அதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பாஸ்கர் குமார் என்பவர் என் சகோதரர் என்றால் ஆமாம். சாந்தி ஜெராக்ஸ் கடை நடத்திவரும் தங்கராஜ் என்பவர் எனக்கு என்ன வேண்டும் என்றால் அவர் யார் என்று எனக்கு தெரியாது.செல்லப்பா கார்டன் டாக்டர் ராஜேந்திர பிரசாத் வீதியில் குடியிருக்கும் மகேந்திரன் என்பவர் எனக்கு என்ன வேண்டும் என்றால் அவர் யார் என்று எனக்கு தெரியாது. கதிரம்பட்டி பெரிய காட்டு தோட்டம் கே டி ரங்கசாமி மகன் கார்த்திகேயன் என்பவர் என்ன வேண்டும் என்றால் அவர் யார் என்று எனக்கு தெரியாது. புங்கம்பாடி அஞ்சல் நத்த காட்டு பாளையம் மேற்குத் தோட்டம் சுந்தரம் மகன் மகேந்திரன் என்பவர் எனக்கு என்ன வேண்டும் என்றால் அவர் யார் என்று எனக்கு தெரியாது. பெருந்துறை சங்கராயன் தோட்டம் குப்புசாமி மகன் முத்துக்குமாரசாமி என்பவரை தெரியுமா என்றால் தெரியும்,அவர் இறந்து விட்டார்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு மகேந்திரன், கார்த்திகேயன் ஆகியோர்கள் என் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் என்றும் அவர்கள் மூலமாக ஈஸ்வரமூர்த்தி மீது சில புரோநோட் வழக்குகள் போன்றவை போலியாக நான்

தாக்கல் செய்துள்ளேன் என்று பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையில் சொல்லி உள்ளார்கள் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம் , அவர் அவ்வாறு சொல்லியுள்ளார், ஆனால் அது பொய்யாக சொல்லியுள்ளார். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் மேற்படி மூன்று நபர்கள் என் உறவினர்கள் அல்ல என்று மட்டும் தான் சொல்லி உள்ளேன் என்றால் ஆமாம். அவர்களை தெரியாது என்று நான் சொல்லவில்லை என்றால் யார் என்றே தெரியாது என்பதை தான் உறவினர்கள் அல்ல என்று சொல்லி உள்ளேன்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishna Priya, 3.7.25
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS